

"தீராத வினையெல்லாம் தீர்த்துவைப்பான் திருவேங்கடத்தான்"

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி, ஏ.சி.எஸ். நகர்,

# ஸ்ரீ வெங்கடாஜலபதி திருக்கோயில்

# மஹா சம்ப்ரோக்ஷண அழைப்பிதழ்

## திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

நாள்: 17.06.2022 வெள்ளிக்கிழமை

நேரம் : காலை 10.01 முதல் 10.29 மணிக்குள்

பெறுநர்:

மதிப்புமிகு.

அனுப்புநர்:

டாக்டர். **ஏ.சி. சண்முகம்,** B.A., B.L., FRCPS(UK)

Former M.P., - M.L.A.,

ஆரணி.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி, ஏ.சி.எஸ். நகர்,

# ஸ்ரீ வெங்கடாஜலபதி திருக்கோயில்

# மஹா சம்ப்ரோக்ஷண அழைப்பிதழ்

## திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா

நாள்:
17.06.2022 வெள்ளிக்கிழமை



நேரம்
காலை 10.01 முதல் 10.29 மணிக்குள்

ஸ்ரீ:

ஸ்ரீ பூமிநீளா, ஸ்ரீ அலர்மேல் மங்கை கோதா தேவி ஸமேத ஸ்ரீ வெங்கடேஸ்வர பரப்ரம்மணே நம:
ஸ்ரீ மதே ராமானுஜாய நம: ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்!

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், ஏ.சி.எஸ்.நகர், ஏ.சி.எஸ்.குழுமம் சார்பாக கல்லூரி வளாகத்தில் நூதனமாக அமைக்கப்பட்டுள்ள

## ஸ்ரீபத்மாவதி தாயார் சமேத ஸ்ரீ வெங்கடாஜலபதி திருக்கோயில், விமான மண்டபம், ராஜகோபுரம்

# அஷ்டபந்தன மஹாசம்ப்ரோக்ஷண அழைப்பிதழ்

## ( திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா )



*செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!*
*நெடியானே! வேங்கடவா! நின் கோவிலின் வாசல்*
*அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்*
*படியாய்க்கிடந்துன் பவளவாய் காண்பேனே!* - குலசேகர ஆழ்வார் (ஸ்ரீ பெருமாள் திருமொழி)

ஆங்கந்தப் பிரம்மாவும் அறுமுகனும் தேவர்களும்
ஓங்கி உலகங்களந்த உயர்கதைகள் பாடுகின்றார்
ஈங்கிந்த வியாழமுனி பஞ்சாங்கம் ஓதுகின்றார்
தீங்கவிகள் செவிமடுக்க வேங்கடவா எழுந்தருள்வாய்...

தொலைவிடத்தும் பலவிடத்தும் சுழன்றுதிரி ஏழ்முனிவர்
சலித்தறியாத் தவமியற்றி சந்தியாவந்தனம் முடித்து
நிலைபெறுமின் புகழ்சொல்லி நின்பாதம் சேவித்து
மலையடைந்து காத்துளர் காண் வேங்கடவா எழுந்தருள்வாய்..

திங்கள் மொழித் திருமுகத்தில் பொங்கும் அருள் புரிபவளே
இங்கு கலைவாணியுடன் இந்திராணி அம்பிகையாம்
மங்கையர்கள் தொழுதேத்தும் மாண்புடைய தனித்தலைவி
செங்கமல வேங்கடத்தான் திருத்தேவி எழுந்தருள்வாய்....

மெய்யன்புடையீர்! வணக்கம்,

ஸ்ரீய:பதியாய் வேத வேதாந்த விழுப்பொருளாய் விளங்கி, தர்மத்தையும் நல்லோர்களையும் காக்கும் பொருட்டு, எங்கும் நிறைந்து திகழ்கிற எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் இப்பூவுலகில் பற்பல திவ்ய சேஷத்ரங்களையும், புராதன, புராண, ப்ரார்த்தனை சேஷத்ரங்களையும் அமைத்துக்கொண்டு நாம் கண்களாலே கண்டு வணங்கிப் பணிந்துப் பயன்பெறும் வண்ணம், அழகிய அர்ச்சா திருமேனிகள் கொண்டு எழுந்தருளியிருக்கின்றான், "எளியவரும் இயல்வினனாய்" அடியார்கள் விருப்பப்படி, எல்லோர்க்கும் அருள்கின்ற எம்பெருமான் திவ்ய ஆணைப்படி, ஆரணி ஏ.சி.எஸ். கல்லூரி வளாகத்தில் நூதனமாக கர்ப்பக்ரஹ. அர்த்த மண்டப, மஹா மண்டப, விமான ராஜகோபுரம் ஆகியன அமைக்கப்பட்டு ஸ்ரீ பத்மாவதி ஸமேதனாய் ஸ்ரீ வெங்கடாஜலபதி பெருமாள், ஸ்ரீ ஆண்டாள், ஸ்ரீ சேனை முதலியார், ஸ்ரீ நம்மாழ்வார், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீமணவாள மாமுனிகள், பெரிய திருவடி (ஸ்ரீகருடாழ்வார்) சிறிய திருவடி (ஸ்ரீ ஆஞ்சனேயர்) ஸ்ரீதும்பிக்கை ஆழ்வார் (ஸ்ரீவிநாயகர்) ஆகிய பரிவார மூர்த்திகளுடன் கொடிமர திவ்ய த்வாரங்களுடனும் திருக்கோயில் அமைக்கப்பெற்று உள்ளது.

மேற்படி ஆலய மஹா சம்ப்ரோக்ஷண (திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா) வைபவம் நாளது ஸ்வஸ்தி ஸ்ரீ சுபகிருது ஆண்டு ஆனி மாதம் 1-ஆம் தேதி(15.06.2022) புதன் கிழமை தொடங்கி நாளது ஆனி மீ 3-ஆம் தேதி (17.06.2022) வெள்ளிக்கிழமை தினம் த்ருதியையும் உத்ராட நக்ஷத்ரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 10.01க்கு மேல் 10.29மணிக்குள் சிம்ம லக்கனத்தில் எம்பெருமான், ஆச்சாரியர்கள் திருவருள் ஆணைப்படியும், *ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீஸ்ரீஸ்ரீ திருமலை திருப்பதி* **ஸ்ரீ பெரியஜீயர் ஸ்வாமிகள்,** *திருமலை திருப்பதி* **ஸ்ரீ சின்னஜீயர் ஸ்வாமிகள்,** *ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீ அப்பன் பரகால* **ராமானுஜ எம்பார் ஜீயர் ஸ்வாமிகள்** *மற்றும் ஸ்ரீ வைஷ்ணவ ஆச்சார்ய பெருமக்கள் திவ்ய அருளாசியுடனும், திருமலை திருப்பதி தேவஸ்தானம், அர்ச்சகர்* **ஸ்ரீ சீதாராமாச்சார்லு ஸ்வாமிகள்** ஆகியோரது அத்யக்ஷத்தில் ஸ்ரீ வைகானஸ ஆகம சாஸ்திர க்ரமப்படி யாகசாலை வைபவங்களுடன் மிகச் சிறப்புடன் நடைபெற உள்ளபடியால் ஆன்மீக அன்பர்கள் அனைவரும் வந்திருந்து கலந்து கொண்டு எம்பெருமான் திருவருள் பயன்பெற்றிட அழைத்து மகிழ்கிறோம்.

*ஜெய் ஸ்ரீமந்நாராயணா!*

அன்புடன் அழைத்து மகிழும்

டாக்டர். **ஏ.சி.சண்முகம்,** B.A., B.L., FRCPS, (UK) Former M.P., - M.L.A., - திருமதி. **லலிதாலட்சுமி சண்முகம்**



**நிகழ்ச்சி நிரல்: ஆனி மாதம் 1ஆம் தேதி 15.06.2022 புதன்கிழமை**

ஆனி மாதம் 1ஆம் தேதி (15.06.2022) புதன்கிழமை, காலை 7.00 மணிக்கு மஹாசம்ப்ரோக்ஷண வைபவங்களை
**ஸ்ரீ பெரும்புதூர் ஸ்ரீமத் பரமஹம்ஸ இத்யாதி ஸ்ரீ அப்பன் பரகால ராமானுஜ எம்பார் ஜீயர்சுவாமிகள்**
அத்யக்ஷகராய் எழுந்தருளி அருளாசி வழங்கி துவக்கிவைத்திட

| | | |
|---|---|---|
| காலை 7.00 மணிக்கு | : | ஸ்ரீ ஆச்சார்ய அநுக்ஞை, ஸ்ரீபகவத் அனுக்ஞை, விஷ்வக்ஷேந ஆராதனம், புண்யாஹவாசனம், யாகசாலை வாஸ்து ஹோமம், வாஸ்து சாந்தி, யாகசாலை ப்ரவேசம் பஞ்சகவ்ய ஆராதனம், ரக்ஷா பந்தன பூஜை, வேத திவ்ய ப்ரபந்தம் தொடக்கம், அகல்மஷ ப்ராயசித்த ஹோமம், யாஜமான்ய வரணம், ஆச்சார்ய ருத்விக் வரணம், ரக்ஷாபந்தனம், விசேஷ ஹோமங்கள் |
| பகல் 12.00 மணிக்கு | : | **ஸ்ரீரங்கம் பெரியகோவில் ஸ்ரீஉபவே. பெரியநம்பி சுந்தரசாரியார் ஸ்வாமிகள்** அத்யக்ஷத்தில் பூர்ணாஹுதி, திருவாராதனம், சாற்றுமுறை. |
| மாலை 5.00 மணிக்கு | : | **ஸ்ரீ திருமலை திருப்பதி, ஸ்ரீமத் பரமஹம்ஸ, இத்யாதி இளைய கேள்வி அப்பன், ஸ்ரீ கோவிந்த ராமானுஜ சின்ன ஜீயர் ஸ்வாமிகள்** அத்யக்ஷத்தில் விஷ்வக்ஷேந ஆராதனம், புண்யாஹவாசனம், தீப பூஜை, மிருத்ஸங்கிரஹணம், மேதினி பூஜை, அங்குரார்ப்பணம், ஸப்தாக்னி ப்ரதிஷ்டை, கும்ப ஆவாஹனம், விசேஷ ஹோமம், வேத திவ்ய ப்ரபந்த பாராயணம், |
| இரவு 9.00 மணிக்கு | : | பூர்ணாஹுதி, திருவாராதனம், சாற்றுமுறை. |

**கலைநிகழ்ச்சிகள்: சொக்கலிங்கம் அரங்கம்**

| | | |
|---|---|---|
| மாலை: 4.30 மணிக்கு | : | **பரதநாட்டியம்** |
| மாலை 5.30 மணிக்கு | : | கலைமாமணி, நாவேந்தர். **நாகை முகுந்தன்** அவர்கள் வழங்கும் **"திருமால் பெருமை"** ஆன்மிகச் சொற்பொழிவு |
| மாலை 6.30 மணிக்கு | : | சொல்வேந்தர், கலைமாமணி. **சுகிசிவம்** அவர்கள் வழங்கும் பட்டிமன்றம் |
| | | தலைப்பு : பக்தி நெறிகளைப் பெரிதும் வளர்ப்பவர்கள் **" ஆடவரா ? மகளிரா?** |

**ஆனி மாதம் 02ஆம் தேதி 16.06.2022 வியாழக்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 7.00 மணிக்கு | : | திருமலை திருப்பதி, திருநின்றவூர் திவ்ய தேசங்களின் தர்மகர்த்தா ஸ்ரீமத் பரமஹம்ஸ பெரியகோவில் கேள்வி அப்பன் **ஸ்ரீ சடகோபராமானுஜ பெரிய ஜீயர் ஸ்வாமிகள்** அத்யக்ஷத்தில் **ஸ்ரீ மான் ஜெகத்ரட்ஷகன் ஆழ்வார்** முன்னிலையில் புண்யாஹவாசனம், ஸங்கல்பம், அக்னி பிரணயனம், கும்ப திருவாராதனம், வேத திவ்ய ப்ரபந்த பாராயணம், மஹாசாந்தி ஜப்பியம், ததுக்தஹோமம், அஷ்டபந்தனம் சாற்றுதல், நூதன மூர்த்திகளுக்குக் கண் திறத்தல், |
| பகல் 12.00 மணிக்கு | : | பூர்ணாஹுதி, சாற்றுமுறை |
| மாலை 5.00 மணிக்கு | : | காஞ்சிபுரம் ஸ்ரீமத் பரமஹம்ஸ வாதிகேஸரி அழகிய மணவாள **ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள், ஸ்ரீ உபவே. தேகளீஸ ராமானுஜாச்சார்யார் ஸ்வாமிகள், ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி** திருக்கோவிலூர் **ஸ்ரீ திருவிக்ரம ஸ்வாமி** தேவஸ்தான ஆதீனம் பரம்பரை தர்மகர்த்தா ஆகியோரது அத்யக்ஷத்தில் யாகசாலை பூஜைகள், கும்பஆராதனம், வேத திவ்ய ப்ரபந்த பாராயணம், திருமஞ்சனம் மஹாசாந்தி கலச புறப்பாடு, கலசாபிஷேகம், பிரதானஹோமம், ஸயனாதிவாசம் |
| இரவு 9.00 மணிக்கு | : | ஸ்ரீவில்லிபுத்தூர் வேத பிரான் பட்டர் **ஸ்ரீ உபவே. சுதர்சனாசார்யார்** அத்யக்ஷத்தில் பூர்ணாஹுதி, அவதாரிகை, சாற்றுமுறை |

**கலைநிகழ்ச்சிகள்: சொக்கலிங்கம் அரங்கம்**

| | | |
|---|---|---|
| மாலை: 3.30 மணிக்கு | : | **பரதநாட்டியம்** |
| மாலை 4.00 மணிக்கு | : | திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் மாணவி கலைமாமணி திருமதி. **தேச மங்கையர்க்கரசி** அவர்கள் வழங்கும் **"குறை ஒன்றும் இல்லை கோவிந்தா"** ஆன்மிகச் சொற்பொழிவு |
| மாலை 5.00 மணிக்கு | : | மன்னார்குடி, டாக்டர்.**ஏ.பி.மணிசங்கர்** குழுவினரின் **"மங்கள லய நாதம்"** |
| மாலை 6.30 மணிக்கு | : | **லஷ்மன் ஸ்ருதி** இன்னிசை நிகழ்ச்சி |



**ஆனி மாதம் 3ஆம் தேதி 17.06.2022 வெள்ளிக்கிழமை**

காலை 6.00 மணிக்கு : விஸ்வரூபம்(கோபூஜை), புண்யாஹவாசனம், மஹாசங்கல்பம், வேத திவ்ய ப்ரபந்த பாராயணம், அக்னி பிரணயணம், கும்ப திருவாராதனம், பிரதான ஹோமங்கள்.

காலை 9.16 மணிக்கு : மஹா பூர்ணாஹுதி, யாத்ராதானம், கலசப்புறப்பாடு

காலை 9.56 - 10.29 மணிக்குள் : விமானம் மற்றும் ராஜகோபுரம் மஹா கும்பாபிஷேகம் ஸ்ரீவெங்கடாசலபதி ஸந்நிதி மற்றும் உபசன்னிதிகள் மஹாசம்ப்ரோக்ஷணம், பிரம்ம கோஷம், சாற்றுமுறை, மஹா தீபாராதனை, ஆசீர்வாதம்.

மாலை 5.00மணிக்குள்: ஸ்ரீ பத்மாவதி தாயார் சமேத ஸ்ரீ வெங்கடாஜலபதி ஸ்வாமி **திருக்கல்யாண உற்சவம்**

**கலைநிகழ்ச்சிகள்: சொக்கலிங்கம் அரங்கம்**

மாலை: 3.00 மணிக்கு : **பரதநாட்டியம்**

மாலை 4.00 மணிக்கு : டாக்டர் **அவ்வை. நடராசன்,** (மேனாள் தமிழ்பல்கலைக்கழக துணைவேந்தர்) அவர்கள் முன்னிலையில் திருக்கோஷ்டியூர். **ஸ்ரீ மாதவன் ஸ்வாமிகள்** அவர்கள் வழங்கும் **"திருமலையப்பன் திருவருள்"** **ஆன்மிகச் சொற்பொழிவு**

மாலை 5.00 மணிக்கு : மன்னார்குடி, டாக்டர். **ஜெயந்தி சங்கர்** அவர்கள் வழங்கும் **"மகளிர் ஜுகல்பந்தி"** இன்னிசை நிகழ்ச்சி"

மாலை 6.00 மணிக்கு : ஆரணி **சிவா - அம்மு, நாடக குழு** வழங்கும்**"கிருஷ்ண லீலா"** நாடகம்

**இரவு 7.00 மணிக்கு மேல் ஸ்ரீ எம்பெருமான் திருவீதி உலா நடைபெறும்**

# அஷ்டபந்தன மஹாசம்ப்ரோக்ஷண பெருவிழாவில் கலந்து கொள்ளும் சிறப்பு ஆன்மிக ஸ்வாமிகள்

**ஸ்ரீமத் பரமஹம்ஸ இத்யாதி ஸ்ரீ அப்பன்**
**பரகால ராமானுஜ எம்பார் ஜீயர் ஸ்வாமிகள்**
ஸ்ரீ பெரும்புதூர்.

**ஸ்ரீமத் பரமஹம்ஸ பெரியகோவில் கேள்வி அப்பன்**
**ஸ்ரீ சடகோபராமானுஜ பெரியஜீயர் ஸ்வாமிகள்**
ஸ்ரீ திருமலை - திருப்பதி.

**ஸ்ரீமத் பரமஹம்ஸ இத்யாதி இளையகோவில் கேள்வி அப்பன்**
**ஸ்ரீ கோவிந்த ராமானுஜ சின்னஜீயர் ஸ்வாமிகள்**
ஸ்ரீ திருமலை - திருப்பதி.

**ஸ்ரீமத் பரமஹம்ஸ வாதிகேஸரி அழகிய மணவாள**
**ராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள்**
காஞ்சிபுரம்.

**ஸ்ரீ உபவே. தேகளீஸ ராமானுஜாச்சார்யர்**
**ஸ்வாமிகள் ஸ்ரீ எம்பெருமானார் ஜீயர்**
திருக்கோவிலூர்.

**ஸ்ரீ உபவே. பெரியநம்பி சுந்தரசாரியர் ஸ்வாமி**
ஸ்ரீரங்கம் பெரியகோவில் - திருச்சி

**வேதபிரான் பட்டர்**
**ஸ்ரீ உபவே. சுதர்சனார்சார்யார் ஸ்வாமி**
ஸ்ரீ வில்லிபுத்தூர்.

**ஸ்ரீ உபவே. ராமானுஜச்சாரியார் நம்பிகள்**
திருக்கோஷ்டியூர்.

**புஜ்யஸ்ரீ சங்கர ஸ்ரீ விஜயேந்த்ர ஸரஸ்வதி**
**சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**
காஞ்சிபுரம் சங்கர மடம் பீடாதிபதி.

**ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய**
**ஸ்வாமிகள்**
மதுரை ஆதினம்.

**ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்**
**தவத்திரு. பொன்னம்பல ஸ்வாமிகள்**
குன்றக்குடி திருவண்ணாமலை ஆதினம்.சிவகங்கை மாவட்டம்

**ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த**
**பரமாச்சாரிய ஸ்வாமிகள்**
தருமபுரம் ஆதினம்.

திரு. **கோஷல விஷ்ணு வாசுதேவன் நம்பூதிரி**
முன்னாள் மேல்சாந்தி சபரிமலை. முன்னாள் தலைமை மேல்சாந்தி
ஸ்ரீ பத்மநாப ஸ்வாமி ஆலயம். திருவனந்தபுரம்

**ஞானகுரு ஸ்ரீ சக்தி அம்மா**
ஸ்ரீபுரம் - வேலூர்.

**ஸ்ரீ பாலமுருகனடிமை ஸ்வாமிகள்**
ரத்னகிரி - வேலூர்

**கலவை. சச்சிதானந்த ஸ்வாமிகள்**
கலவை - வேலூர்




யாகசாலை நிர்வாக கைங்கர்யம் அத்யயனபட்டர்
திருக்கோஷ்டியூர் **மாதவன் ஸ்வாமிகள்**

...வரவேற்று மகிழும்...
Er. **ஏ.சி.எஸ். அருண்குமார்**
தலைவர், திருக்கோயில் நிர்வாகம்

திருக்கோவில் ஸ்தபதியார்
சீர்காழி. திரு. **காளிதாஸ்** அவர்கள்

அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், கல்வியாளர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற, நகரமன்ற, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பிரமுகர்கள், அரசு அதிகாரிகள், திரைப்பட பிரமுகர்கள் மற்றும் அன்பர்கள் கலந்து கொண்டு தரிசித்து ஸ்ரீ வெங்கடாஜலபதி பெருமாள் திருவருள் பெற்று இன்புறுவார்களாக...



*உங்கள் வாழ்வானது..!*
*உங்கள் எண்ணப்படியே அமையும்..!*
*எண்ணத்தை எப்போதும்*
*தூய்மையாக வைத்திருங்கள்..!*

- பகவத்கீதை



திருக்கோயில் ஸ்தாபனம்

## டாக்டர் எம்.ஜி.ஆர். கல்விக் குழுமம்

சென்னை.

## ராஜராஜேஸ்வரி கல்விக்குழுமம்

பெங்களூரு

## ஏ.சி.எஸ். கல்விக்குழுமம்

ஆரணி - கொடைக்கானல் - திருவனந்தபுரம்.

ஆலய நிர்வாகம் :

## ஏ.சி.எஸ். அறக்கட்டளை

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

ஆலயத்தில் நடைபெறும் மண்டலாபிஷேகம் மற்றும்
தினந்தோறும் நடைபெறும் அபிஷேக ஆராதனைகள்,
சிறப்புப் பூஜைகள், மார்கழி உற்சவங்கள், பிரமோத்சவம்,
ஏகாதசி உற்வசம், வைகுண்ட ஏகாதசி, அன்னதானம் ஆகியவற்றில் பங்குபெற
விரும்புபவர்களும் தங்களின் இல்ல சுபநிகழ்ச்சி சிறப்புப் பூஜைகளுக்கும்
தொடர்புகொள்ள

**செல்: 76789 67897**
srivenkatachalapathytemplearni@gmail.com

RAJAA OFFSET
7598401328